www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

GERMAN BRANCH

## இன்றைய நிலையில் எமது நிலைப்பாடு

இன்றைய போராட்ட நிலைமைகளையும் அதில் எமது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தும் நோக்கில் இவ்வறிக்கையின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திக்கின்றோம்.

இன்று நாம் தமிழ் மக்களின் துரோகிகளாகவும், இலங்கை அரசின் வால்பிடிகளாகவும் செயல்படுவதாக வெளிநாடுகளில் குறிப்பாக புலிகளினாலும், தம்மை முற்போக்குவாதிகளாகவும், அராஜக எதிர்ப்பு வாதிகளாகவும் சஞ்சிகைகள் மூலம்தனம் காட்ட முற்படுவோராலும் வர்ணிக்கப்படுவதை நாம் நன்றாக அறிவோம்.

நாம் இலங்கை அரசுடன் புலிகள் தவிர்ந்த தமிழ் முஸ்லீம் அரசியற் கட்சிகளுடனும் இணைந்தும், தனியாகவும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றோம் என்பதையோ, இலங்கை ராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில்குறிப்பாக வவுனியா, மன்னாரிலும் மற்றும் கிழக்கு மாகாணத்திலும் மக்களின் பாதுகாப்பு, புனர்நிர்மானம்,, சமாதானம் போன்ற தேவைகளுக்காக இணைந்து செயல்படுகிறோம் என்பதை மறுப்பதற்கில்லை.

விடுதலைப்போராட்டத்தில் ஆயுதரீதியான யுத்தத்தில் பல வெற்றிகளை புலிகள் சாதித்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆயினும் இவ்வெற்றிகள் இலட்சியத்தைப்பலப்படுத்தி போராட்டத்தை ஒரு சரியான திசைக்கு இட்டுச் செல்லவில்லை என்பதே எமது கருத்தாகும். அதற்குப் பதிலாக இவர்களின் வழிமுறைகள் மக்களின் மேல் ஆயுத அடக்குமுறையை மேலும் அதிகமாக்கியுள்ளது. மக்களின் கருத்துச் சுதந்திரத்தை முற்றாக அழித்துள்ளது. இன்று எமது மக்களையும் போராட்ட உணர்வுள்ள இளைஞர் சக்திகளையும் வெளிநாடுகளில் அகதிகள் என்கிற பெயரில் சர்வதேசக் கூலிகளாக மாற்றியுள்ளது. எம்மண்ணில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களையும் வேலை வாய்ப்புகள் அற்றவர்கள் ஆக்கி தமது அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட அரசிடமும் மற்ற சமூக சேவை ஸ்தாபனங்களிடமும் கையேந்தி நிற்கும் நிரந்தர அகதிகள் ஆக்கியுள்ளது.

போராட்டத்தில் மக்களை இணைக்கின்றோம் என கூறிக் கொண்டு மக்கள் உயிர் வாழ்வதற்காக அரசினாலும் சமூக சேவை ஸ்தாபனங்களினாலும் வழங்கப்படும் மா, அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கூட விநியோகம் என்ற பெயரில் பலவந்தப் பறிப்புச் செய்கின்றனர். யுத்த நிதி என்ற பெயரில் கப்பம் வாங்குகின்றனர். வடபகுதியை விட்டு வெளியே செல்வதற்கான அனுமதி என்னும் பெயரில் பணம் வசூலிக்கப்படுவது மட்டுமல்லாமல் கூட்டணி உட்பட மற்றைய தமிழ் அமைப்புக்களின் ஆதரவாளர்கள் அதிகம் உள்ளதாகப் புலிகளால் கருதப்படும் பகுதிகளில் வாழ்வோருக்கு இழுத்தடிப்புக்களும் செய்கின்றனர். தென்னிலங்கையில் அரசசேவைகளில் இருப்பவர்கள் கூட அவற்றை விட்டு விலகும்படி அவர்களின் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் பயமுறுத்தப்படுவதாக நம்பிக்கையான செய்திகள் மூலம் அறிகிறோம். இதன் மூலம், அவர்களையும் வெளிநாடுகளில் அகதிகள் என்ற பெயரில் அவர்களிடமும் பயமுறுத்தி

படிப்பகம்

www.padippakam.com

பலவந்த நிதி பறிப்பு செய்ய மேற்கொள்ளும் ஒரு தந்திரோபாயமாகவே நாம் இதனைக் கருதுகிறோம்.

இவை சம்பந்தமாக மக்கள் விளக்கம் கோரவோ, தடுக்கவோ முடியாத அளவிற்கு ஆயுத அடக்குமுறை மூலம் ஒடுக்குவதே எமது விடுதலைப்போராட்டம் என்ற நிலையை இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உருவாக்கி இதுவே விடுதலைப் போராட்டம் என்கிற தப்பான ஒரு எண்ணத்தை மக்களிடம் உருவாக்கியுள்ளனர்.

இந்திய ராணுவம் எமது பிரதேசங்களில் நிலை கொண்டிருந்த காலங்களில் E.P.R.L.F; E.N.D.L.F இயக்கத்தினர் சிறுவர்களைப் பலவந்தமாக இராணுவத்தில் இணைப்பதாக கூப்பாடு போட்ட புலிகள், இன்று 5ம் வகுப்பிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மில்லர், திலீபன் போன்றவர்களின் வீரசாகசங்களை பாடத் திட்டமாக்கி மூளைச்சலவை செய்து ஏதும் அறியாத அப்பாவி பாலகர்களை ஆயுதபாணிகளாக்கி பலிக்கடாக்கள் ஆக்குவதை தினசரிச் செய்திகள் மூலம் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

புலிகளின் தன்னிச்சையான மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் தனிநபர் முரண்பாடுகளினாலும் மனமுடைந்து புலிகளில் இருந்து வெளியேறிய பல இளைஞர்கள் வெளிநாட்டடிற்கு வந்ததும் தம்மனக்குமுறல்களையும் விமர்சனங்களையும் தாம் வாழ்கின்ற பகுதிகளில் மற்றவர்களிடம் வெளிப்படுத்தும் போது இங்குள்ள முகவர்கள் மூலம் (குறிப்பாக வட ஜேர்மன் பகுதிகளில்) மிரட்டப்பட்டதாக பாதிக்கப் பட்டவர்கள் மூலம் நேரடியாக எமக்குத் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் இன்று பெரும்பான்மையான தமிழர்களும் முஸ்லீம்களும் அகதிகளாக்கப் பட்டுள்ளனர். ஏற்பட்டுள்ள பரிதாபகரமான நிலமைக்குரிய பொறுப்பை இலங்கை அரசு, முஸ்லீம் ஊர்காவல்படை, புலிகள் போன்றவர்களே ஏற்க வேண்டியுள்ளனர். கிழக்கில் உள்ள தமது தளங்களை பாதுகாப்பதற்காக (முஸ்லீம்கள் தம்மை காட்டிக் கொடுப்பதில் இருந்து பாதுகாக்க) பயமுறுத்தும் தந்திரோபாயமாக புலிகள் தாக்கியமையால் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே காலாகாலமாக இருந்து வந்த முரண்பாட்டைக் கூர்மையாக்கியது. இதை சாதகமாக்கிக் கொண்டு புலிகள் முஸ்லீம் ஊர்காவல் படையின் தாக்குதல்களில் இருந்து தமிழர்களைப் பாதுகாப்பதாக கூறிக் கொண்டு முரண்பாட்டை மேலும் கூர்மைபடுத்தி அவர்களின் அவலங்களில் தமது தளங்களைப் பாதுகாக்கும் தந்திரோபாயத்தைக் கையாளுகின்றனர். அரசானது புலிகளின் அட்டகாசங்களில் இருந்து முஸ்லீம்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு முஸ்லீம் ஊர்காவல் படை என்ற பெயரில் தனது குண்டர்களை ஆயுதபாணிகளாக்கி தமிழர்களையும் அழிப்பதன் ஊடாக கிழக்கில் முஸ்லீம்கள் தமிழர்கள் இருபகுதியினரையும் பலவீனப் படுத்தி சிங்கள மக்களை பெரும்பான்மையாக்கும் வேலை திட்டத்தை நுட்பமாக செயல்படுத்துகின்றது. மேலும் புலிகளின் வயல் எரிக்கும் நடவடிக்கையானதுகிழக்கின் பொருளாதாரமான விவசாயத்தை சீரழிப்பதுடன் அதையே நம்பி வாழுகின்ற ஏழை மக்களை உயிர்வாழ்வதற்கான அரசின் தயவை வேண்டி நிற்கும் அகதிகள் ஆக்கியுள்ளது.

ஆனால் அரசு மறுபுறத்தில் தனது முகத்தை மறைப்பதில் மிக நுட்பத்துடன் செயலாற்றி தமிழ் முஸ்லீம் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணப்படவேண்டும் என்ற அடிப்படையில் கொள்கை ரீதியான அரசியல் தீர்வு அறிக்கை ஒன்றை தயாரிக்கும்பொறுப்பை தமிழ் முஸ்லீம் கட்சிகளிடம் விட்டுள்ளது. ஆனால் தமிழ் முஸ்லீம் கட்சிகளிடமும் தமிழ் கட்சிகளிடமும் உள்ள அரசியல் முரண்பாடுகளின் தாக்கமும், பொறுப்பற்ற தன்மையும் எமது நாட்டின் மக்களின் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண முற்படாமல் மற்றவர்களின் தீர்வுகளுக்கு நாம் பலம் சேர்க்கும் கடந்த கால தவறுகளின் தொடர்ச்சியான போக்கும் பல மாத காலமாக எவ்வித தீர்க்கமான முடிவுக்கும் வரமுடியாத ஒரு நிலையை உருவாக்கியுள்ளது.

கிழக்கில் மக்களின் நிலமைகளைக் கவனத்திற் கொண்டு தீர்வுக்கான உடனடி அவசியம் காரணமாக நாம் எம்மால் ஆன சகல முயற்சிகளையும் மேற் கொள்ளுவதுடன் எமது நிலைப்பாடு என்னவெனில் இருபகுதியினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த அளவிலான ஒரு தீர்வையாவது இன்று நாம் உருவாக்கி மக்களை அழிவில் இருந்து காப்பாற்றுவதுடன் அதை நடைமுறைப்படுத்தும் கடமையை அரசிடம் ஒப்படைப்பதன் மூலம் அரசின் நிலையை இனம் காட்டல் என்பதாகும்.

இச் செயலானது அரசு கிழக்கிலும் வடக்கிலும் இருவேறு முகங்களில் செயல்படுவதையும் எம்முடையே உள்ள வெற்றிடத்தை பயன்படுத்தி மக்களின் ரட்சகனாக செயல்படும் தன்மையும் தவிர்க்க ஏதுவாக அமையும் என நம்புகிறோம். இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வை உருவாக்கும் என்றோ இது சாத்தியப்படுத்தக் கூடியது என்றோ நாம் நம்பவில்லை.

padippakam

www.padippakam.com

கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் பிரச்சினையானது நடைமுறைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. இந்நிலை காரணமாக எமது ஸ்தாபனத்தில் உள்ளவர்கள் சிலர் மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் துரோக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டமைக் காக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டும் உள்ளது. இ,வ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் எம்மவர்கள் பற்றி ஸ்தாபனத்திற்கு தெரியப்படுத்துவது மக்களின் பொறுப்பாகும்.

தமிழீழப்போராட்டத்தை சீரழித்து இந்நிலமைக்கு இட்டுச் சென்றதன் பெரும் பொறுப்பையும் துரோகத்தனத்தையும் தமிழீழவிடுதலைப்புலிகளே பொறுப்பேற்கவேண்டும். தமது ஆயுத சர்வதிகாரத்தை கைவிட்டு சமாதான போக்கிற்கு வராதவரைக்கும் அவர்கள் எமது எதிரிகளாகவே கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே தருணத்தில் எல்லா ஸ்தாபனங்களுக்கும் ஆதரவாளர்கள் உண்டு. ஆதரவாளர்கள் இன்றி எந்தவொரு ஸ்தாபனமும் தமது பணிகளை நிறைவேற்றவோ அன்றி இயங்கவோ முடியாது. சகல ஸ்தாபனங்களினதும் ஆதரவாளர்களே விடுதலைப் போராட்டத்தை வளர்த்ததில் முக்கிய பங்காளர்கள் ஆவர். நாம் எனவே புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரான வர்கள் அல்ல. அதே வேளையில் தமது குறுகிய சுயநல நோக்கங்களுக்காக சகோதா ரப் படுகொலைகளுக்கு காரணமானவர்களை பூண்டோடு அழிப்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

இவற்றிற்காக எம்மை துரோகிகள், அராஜகவாதிகள் என்று வர்ணிக்கப் போகிற வர்களுக்கு நாம் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறோம். யார் துரோகிகள் என்பதை, என்று துப்பாக்கி அதிகாரம் வீழ்த்தப்பட்டு மக்கள் தங்கள் கருத்துக்களை பயம், மிரட்டல் இன்றி தெரியப்படுத்தும் சூழ்நிலைகள் என்று உருவாக்கப் படுகிறதோ அன்று வெளிப்படையாகும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம்

"அனைத்து அதிகாரங்களும் உழைக்கும் மக்களுக்கே"

தொடர்புகட்கு:

S.Jeganathan
Muehl str 11
7100 HN/ Bockingen

தொலைபேசி
07131 30722
0711 2571394

நாளாந்த செய்திச்சேவை: 0711 2573625
0711 6408657

படிப்பகம்